யாழ்ப்பாணம்

## ★ திருமலை 'பிரிமா' மா ஆலை மூடப்பட்டது!

(திருகோணமலை)

திருகோணமலையில் அமைந்துள்ள சிங்கபூர் நிறுவனம ஒன்றுக்கு சொந்தமான பிரிமா மா தொழிற்சாலை தொழிலாளர் பிரச்னையை அடுத்து மூடப்பட்டது.

தொழிலாளியொருவர் மாவில் அமோனியா கலந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வேலைநீக்கம் செய்யப்

(6-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 23 இதழ் 308
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9-12-1994

## பொருளாதாரத்தடையை முற்றாக நீக்க கோரிக்கை

[கொழும்பு]

வடபகுதிமீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையை அரசு முற்றாக நீக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக சமாதான அமைப்பு நேற்று இந்தக் கோரிக்கையை அரசுக்கு விடுத்தாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் போர் நடைபெற்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

## 6 பற்றறிகளை எடுத்துவர பயணிகளுக்கு அனுமதி

(மானிப்பாய்)

கொழும்பிலிருந்து வட பகுதிக்கு வரும் பயணிகள் ஆறு பற்றறிகளை எடுத்துவர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து நான்கு பற்றறிகளுடன் வந்த பயணிகள் பலரை வவுனியா தாண்டிக் குளத்திலுள்ள படையினர்

(6ம் பக்கம் பார்க்க)

### புலிகளுடன் பேசி

# சமாதானத் தீர்வுகாண்பதே இல. அரசின் உறுதியான முடிவு!

## அமைச்சர் கதிர்காமர் இந்தியாவிடம் தெரிவிப்பு!!

[புதுடில்லி]

**இனப்பிரச்னைக்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சமாதானத் தீர்வு காண்பதே இலங்கை அரசின் உறுதியான முடிவு. இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியத் தலைவர்களிடம் இவ்வாறுதெரிவித்துள்ளார்.**

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ், ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் சிங் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில இலங்கையின் இனப்

(6ம் பக்கம் பார்க்க)

## மாகோவில் 8000 பரல மண்எண்ணெய் வந்தது

(நெல்லியடி)

மாகோ கப்பல் 8000 பரல் மண்ணெண்ணையுடன் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

மண்ணெண்ணெய் பரல்கள் இறக்கும் பணி உடன் ஆரம்பமாகியது.

இதேவேளையில்பருத்தித்துறை

(6ம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசு பாராட்டு

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு தீர்வு காண இலங்கை அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து இந்திய அரசு பாராட்டு தெரிவித்துள்ளது. இதேவேளையில் சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு சகலவிதமான ஒத்துழைப்புக்களையும் இலங்கைக்கு வழங்க இந்தியா தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ், ஜனாதிபதி சங்கா தயாள் சர்மா, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் சிங்கையும் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புகளின்

(6-ம் பக்கம்பார்க்க)

## பாப்பரசர் விஜயம் காப்புறுதி செய்யப்பட்டது

(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் வரலாற்றுச் சிறப்புமிக்க இலங்கை விஜயத்தை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முழுமையாகக் காப்புறுதி செய்ய

(6ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு உறுதி ஊட்டவே போர்நிறுத்தம் பாதைதிறப்பு

### – அமைச்சர் தர்மசிறி தகவல்

[கொழும்பு]

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் முழு மனதுடனே ஈடுபட்டு வருகின்றது என்பதை விடுதலைப்புலிகளுக்கு உணர்த்தும்விதமாகவே யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துவதற்கும், ஆனையிறவுப் பாதையை திறந்து விடுவதற்கும் அரசு முன்வந்துள்ளது.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்றுப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தா.ர்.

அமைச்சர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது;-

(6-ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்டம் நிறைவேறியது

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் அவசரகாலச்சட்டத்தை மேலும் நீடிப்பது தொடர்பான பிரேரணை நடாளுமன்றத்தில் நேற்று ஏகமனதாக நிறைவேறியது. க இ

## புலிகளின் பதில் வந்ததும் யுத்தநிறுத்தம் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பதில் கிடைத்ததும் யுத்த நிறுத்தம் பற்றிய திகதி அறிவிக்கப்படுமென பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளரர்.

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் லெங்கை விஜயத்தை அடுத்து யுத்த நிறுத்தம், மற்றும் பாதை திறப்பு விவகாரம் சம்பந்தமாக புலிகளுக்கு அரசாங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் அது சம்பந்தமான பதிலை அரசு எதிர்பார்த்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே-இ)

## புலிகளின் இணக்கத்துடன் ஆனையிறவு பாதை திறக்க முடிவு

(கொழும்பு)

அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இணக்கமான உடன்பாடு காணப்படும் பட்சத்தில் ஆனையிறவுப்பாதை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படும்என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இப்போக்குவரத்து பாதை குறித்து விடுதலைப் புலிகளுடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வர அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகளை தடைசெய்யும் கோரிக்கை சுவிஸ் நாடாளுமன்றினால் நிராகரிப்பு

(பேர்ண்)

தமிழீழ விடுதலைப்புலிகளை தடைசெய்ய வேண்டும் என்று விடுவிக்கப்பட்ட கோரிக்கையை சுவிஸ் நாடாளுமன்றம் நிராகரித்துள்ளது.

சுவிற்சலாந்தின் நீதி அமைச்சர் சுவிஸ் நாடாளுமன்றத்தில் புலிகளை தடை செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் இதனை அடுத்து கடந்த திங்கட்கிழமை மேற்படி கோரிக்கை சுவிஸ் நாடாளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. கே;சி

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### ஆங்கிலம் கணிதம் 95

ஆண்டு 5, 6ல் இருந்து O/L வரை விசேடமாக ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும் ஆசிரியர் B. Sc 85. சிவன் கோவிலடி. மணல்தறை லேன், திருநெல்வேலி. (சி-1341)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1313)


# மட்டு. அம்பாறையில் தொடர்ந்து தேடுதல்

(மட்டுநகர்)

மட்டு, அம்பாறை மாவட்டங்களில் படையினரின் தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் கடந்த இருவாரங்களாக அதிகரித்து காணப்படுகின்றன.

மட்டு. அம்பாறை மாவட்ட எல்லைப்புறங்களில் அதிகளவில் படையினர் தேடுதல் மற்றும்சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறுர்கள்.

இதேவேளை வாழைச்சேனை, செங்கலடிப் பகுதிகளில் குறைந்தது வாரம ஒருதடவை படையினர் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதலில் ஈடுபட்டு வருகிறுர்கள். (ரி)

## விவசாயிகள் ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாய ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1994 ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்குரிய ஒய்வூதியக் கொடுப்பனவுகள் கமத்தொழில் காப்புறுதி சபை மாவட்டக் காரியாலயத்தில் நேற்றுமுதல் வழங்கப்பட்டுவருகிறது. -ரி

## தையல், மனையியல் பயிற்சிநெறி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசத்தில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடாத்தப்படும் தையல், மனையியல் பயிற்சிநெறியொன்று ஆரம்பிக்சப்படவுள்ளது. இப்பயிற்சிநெறியில் தையல், மனையியல் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் யுவதிகள் க. பொ. த. (சாதா) தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதோடு 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட வயதைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 20ம் திகதிக்கு முன்னர் பருத்தித்துறைப் பிரதேச செயலருக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. 52

## நிவாரண உதவிகள்

(மானிப்பாய்)

வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்டு அகதியாக உள்ளவர்களுக்கு பல நிவாரணகளை வழங்க கனடா நிறுவனமென்று முன்வந்துள்ளது.

இந்நிறுவனம் நடக்க முடியாதவாகளுக்கு முச்சககர வண்டிகள் ஊன்றுகோல்கள் காதுகேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவிகள் மருந்து வகைகள் என்பனவற்றை அனுப்பிவைக்கப்படவுள்ளது. 71-ரி

# மழை வெள்ளத்தினுல் பா●க்கப்பட்டவர்களுக்கு மந்தகதியில் நிவாரணம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் அண்மையில் பெருமழை வெள்ளத்தினுல், 11 ஆயிரத்து 145 குடும்பங்களை சேர்ந்த சுமார் 35 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர்.

சித்தாண்டி, ஐயங்கேணி, மாவடி வேம்பு, ரமேஸ்புரம் ஆகிய கிராமங்கள் இன்னும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மந்தகதியிலேயே நிவாரணம் வழங்கப்படுவதாக அம்மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். (கே-ரி)

## ஒளி விழா

(உடுவில்)

புனித ஹென்றியரசர் கல்லூரி ஆதரவில் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் நடத்தும் ஒளி விழா டிசம்பர் 22 ஆம் திகதி வியாழக்கிழமைமாலை இரண்டு மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் (மானிப்பாயில்) நடைபெற உள்ளது. பதில் அதிபர் எஸ். எல். அன்ரனி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வண, பிதா ஜேம்ஸ் சிங்கராயர் பிரதம விருந்தினராகவும். உதவிக்கல்விப்பணிப்பாளர்களான திரு. அ. தற்பரானந்தன், திருமதி றெஜினு இருதயநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கல்ந்து கொள்வர். - 109

★

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இடம் பெயர்ந்து இயங்கி வரும்பண்டத்தரிப்புஜெயசிந்தா றேமன் கத்தோலிக்க பாடசாலையில் ஒளிவிழா சிறப்பாக நடைபெற்றது.

★

மானிப்பாய் புனித அன்னம்மாள் றேமன் கத்தோலிக்க பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமையனறு ஒளி விழா சிறப்பாக நடைபெற்றது கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. -72

★

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் இயங்கிவரும் ஆவேமறியா பாலர் பாடசாலை ஒளி விழா இன்று 9ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாலர் பாடசாலை முன்றலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு அதிவந்தனத்துக்குரிய தோமஸ் சௌதரநாயகம்பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் -162

★

(ஆனைப்பந்தி)

கெற்பலி பணடிதர் குடியிருப்பில் இயங்கிவரும் புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயத்தின் 'ஒளி விழா' அண்மையில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் செ. சண்முகவடிவு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மிருசுவில் பங்குத் தந்தை வண. பிதா. பீற்றர் ரூசைரெட்ணம் சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டார். -101

## சுகாதர ஆய்வு

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் மேற்கு இருத்தலடி என்ற இடத்தில் பலருக்கு காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து இப்பகுதியில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் வீடு வீடாக சுகாதார ஆய்வும் இரத்த பரிசோதனையும் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டது.

இப்பிரிவு பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் மற்றும் செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் ஆகியோர் இந்த ஆய்வில் ஈடுபட்டனர். -71

# சமாதான பேச்சால் அரசுக்கு நெருக்கடி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் ஆரம்பிககப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசு இரகசியமான முறையில செயறபட்டுவருவதாக ஏ. எவ், பி. செய்தியாளர் அமல் ஜெயசிங்க பி. பி. ஸி. சந்தேசியாவுக்கு தெரிவித்தார்.

முன்னைய அரசு போலன்றி தமது அரசு புலிகளுடனுன பேச்சுக்கள் குறித்து பக்களுக்கு உடனுக்குடன் பகிரங்கப்படுத்துமென திருமதி சந்திரிகா பிரதமராக இருந்தபோது கூறிவந்த போதும் தற்போது அதற்கு முரணுன முறையில் அரசு நடந்துகொள்கிறது என்ருர்.

இதனுல் அரசு இவ்விவகாரத்தில் நெருக்கடிகளை சந்திக்க வேண்டியதொருநிலை ஏற்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

## செப்ரிசிமியாவினுல் குழந்தை மரணம்

(ஆனைப்பந்தி)

செப்ரிசிமியாவினுல் பெண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. யாழ். கொட்டடிப் பகுதியில் தங்கியிருந்த புங்குடுதீவைச் சேர்ந்த அன்ரன் நிஷாந்தினி என்ற ஏழுயாதக் குழந்தையே உயிரிழந்தது மேற்படி குழந்தைநோயினுல் பீடிக்கப்பட்டதைத் தொடர்ந்துகடந்த பதினைந்து தினங்ளாக யாழ் போதனுவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இக்குழந்தை கடந்த திங்கட்கிழமை உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

## தேசிக்காய் விலை உயர்வு

(அரியாலை[

யாழ். மாவட்டத்தில்தேசிக்காயின் விலை உயர்ந்துள்ளது. இரண்டு ரூபாய் விற்ற தேசிக்காய் ஒன்று எட்டு ரூபாய் வரை விற்கப்படுகின்றது. இதனுல் ஊறுகாய் உற்பத்தி செய்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். (59)

## வார்டுகளுக்கு மின்சாரம்

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி, பளை, மருதங்கேணி வைத்தியசாலை வார்டுகளுக்கு நோயாளர்கள் நன்மை கருதி இரவில் மின்னெளி வழங்கப்படவுள்ளது.

இவ் அரசினர் வைத்திய சாலைகளுக்கு புதிய ஜெனரேட்டர்கள் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினுல் அனுப்பி வைக்கடபட்டுள்ளன. 154

## சீருடைத் துணி விநியோகம்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் மத்திய அரசின் கீழ் பணிபுரியும் அலுவலக ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்கான சீருடைத் துணிகள் நேற்று முதல் வழங்கப்படுகின்றன. 71

# பாதிக்கப்பட்ட ஊழியர் முறைப்பாடு

(கொழும்பு)

1977-ம் ஆணடுக்குப் பின்பு அரசியல் பழிவாங்கல் மூலம் வேலையிழந்த ரயில்வே, பஸ், ஊழியர்கள். தமது முறைப்பாடுகளை இம்மாதம் 15-ம் திகதிக்கு முனபு அனுப்பிவைக்குமாறு, போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது,

ஏற்கணவே கிடைக்கப்பட்ட முறைப்பாடுகள் போக்குவரத்து பிரதி அமைச்சரின் தலைமையில் நியமிக்கப்பட்ட மூன்று குழுககளினுல் தற்போது பரிசீலிக்கப்பட்டுவருகின்றது. இக்குழுவின் சிபார்சின் பேரிலேயே பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுமென்று மேற்படி அமைச்சு அறிவித்துள்ளது. -வி-ரி

# அகதிகளுக்கு உதவ அதிகாரிகள் நியமனம்

(மானிப்பாய்)

வடக்கு - கிழக்கு பகுதியில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு புனர்வாழ்வு நடவடிககை மேற்கொள்வதற்கென அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ் அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று விசாரித்து வபரங்களைத் திரட்டி வருகின்றனர், மேலும் இவர்களுக்கான புனரமைப்பு வேலைத்திட்டங்கள் துரித கதியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈட்டை துரித கதியில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

இந்த நட்டஈட்டை வழங்குவதற்கென நடமாடும் செயலகமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியை வேறு விடயங்களுக்கு பயன்படுத்தக் கூடாதென்றம் நிதியை வீண்விரயம் செய்யச்கூடாதென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். -71

## பாணுக்குத் தட்டுப்பாடு

[அரியாலை]

யாழ். நகரில் பாணுக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனுல் மக்கள் நேரத்துடன் வந்து கியூவில் நின்று பாண் பெறுவதை தினமும் காணக்கூடியதாக இருக்கின்றது. (59)


சுன்ஞகம் பல நோ. நோ. கூ. சங்கம்
[வ/து] சுன்ஞகம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் டில்லர் கலப்பை கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சங்கவேலை நாட்களில், தலைமை நிலையததில் டில்லரைப் பார்வையிட்டு, கேள்விப் பத்திரங்களைப் பெற்று, 17.12-94 ந் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகின்ருேம்.

— பொதுமுகாமையாளர்

சுன்ஞகம் பல நோ. கூ. சங்கம்.
சுன்ஞகம்,
07-12-94 (எ 4577)



வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச

## அறிவித்தல்

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கலை நிகழ்வுப் போட்டிகள் 10-12-94, 11-12-94 ஆகிய திகதிகளில் காலை 8-30 தொடக்கம் மாலை 5-00 மணிவரை இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளதால், போட்டியாளர்கள் தங்கள் கொத்தணிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நேரத்திற்கு சமூகம் கொடுக்கவும்.

பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்

இல. 499,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (எ 4576)

# அரசு - புலிகள் பேச்சுக்களை இந்தியா ஆதரிக்கும்

## பிரதமர் ராவ் கூறுகிறார்

[புதுடில்லி]

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் துவக்க திட்டமிட்டிருப்பது, இவ்வளவு காலமாக வன்முறையால்பாதிக்கப் பட்டிருக்கும் அந்நாட்டில் அமைதி திரும்ப வழிவகுக்கும். இருதரப்பும் நடாத்தும் பேச்சுக்களை இந்தியா ஆதரிக்கும் என்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவந்துள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் பிரதமர் நரசிம்மராவை சந்தித்து, விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது பற்றி தெரிவித்தபோதே திரு. ராவ் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் திருமதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அரசு அமைக்கப்பட்டதனை அடுத்து, இந்தியா வந்துள்ள முதலாவது மூத்த அமைச்சர் திரு. கதிர்காமர் ஆவார்.

இந்த புதிய அரசு பதவிக்கு வந்ததும், இலங்கைக்குசிறப்பு தூதுவர் ஒருவரை பிரதமர் ராவ் அனுப்பியது ஒரு நல்ல தொடக்கமாகும் என்று திரு. கதிர்காமர் அப்போது தெரிவித்தார்.

முன்னதாக இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. தினேஷ் சிங்கை திரு. கதிர்காமர் சந்தித்துப் பேசினார்.

பாக்கு நீரிணைப் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கும்போது ஏற்படும் பிரச்சினைகள்பற்றி இரு அமைச்சர்களும் விவாதித்தனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கை ஒத்துழைக்க தயாராக இருப்பதாக திரு. கதிர்காமர் உறுதியளித்தார்.

இரு நாடுகளிடையேயும் பொருளாதார ஒத்துழைப்பு உட்பட நல்லுறவுகளை வலுப்படுத்துவதன் அவசியத்தையும் இரு அமைச்சர்களும் வலியுறுத்தினர். [கே-சி]

சிறந்த மாணவர்க்கு

# புலமைப் பரிசில்களை மக்கள் வங்கி வழங்கும்

[கொழும்பு]

கடந்த ஆண்டு, க.பொ.த. உயர்தரப் பரீட்சையிலும், க.பொ.த.சாதாரணதரபரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்களுக்கு மக்கள் வங்கி புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

மாணவர்கள் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் இம்மாதம் 20-ம் திகதி கொழும்பு கிருண்ட் ஒறியன்ரல் ஹோட்டலில் இடம்பெறும்.

நீதி அரசியல் யாப்பு அலுவல்கள் அமைச்சர் ஜீ எல். பீரிஸ் பிரதம அதிதியாக இவ்வைபவத்தில் கலந்து கொள்வார். -கே

# அப்பிள் பழ வியாபாரிக்கு கடும் எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்.நகரின் பிரதான சந்தியொன்றில், அப்பிள்பழங்களை நிலத்தில் சுகாதாரமற்றமுறையில் உரப்பைகளின் மேல் வைத்து விற்பனை செய்த நடமாடும் வியாபாரி ஒருவர் தமிழீழ சுகாதார சேவை உணவுப் பரிசோதகர்களின் திடீரப் பரிசோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டார்.

இந்த வியாபாரியை கடுமையாக எச்சரித்ததுடன், அப்பிள் பழங்களை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையையும் உடனடியாக மேற்கொண்டனர். [ரி]

சைவமும் தமிழும் வளர்த்த

# எமது பெரியார்களுக்கு சிலை எழுப்பி நன்றி கூறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''சைவமும் தமிழும் வளர்த்த பெரியோர்களுக்கு சிலை எழுப்புவது எமது கடமை. அந்த வழியில் இராமநாத வள்ளலுக்கு சிலை எழுப்பி எமது நன்றியைத் தெரிவித்துள்ளோம்.''

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இராமநாதன் உருவச் சிலை திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் சேர். பொன். இராமநாதனின் சிலையை துர்க்காதுரந்தரி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி திரைநீக்கம் செய்து வைத்தார்.

திரு. இ. நமசிவாய தேசிகர், பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை முன்னைநாள் அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

உருவச்சிலையை திறந்து வைத்து உரையாற்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இராமநாதனின் நாமம் ஈழத்தில் மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகளில் எல்லாம் கூட ஒலிக்கிறது என்றார்.

உடுவில் பிரதேச மேலதிக அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் பேசும்போது பெண்பிள்ளைகள் ஆத்மீக சக்தியை உணர்ந்துகொள்ள வேண்டும். சைவசமய பாரம்பரியத்துடன் கூடிய கல்வியை அவர்கள் பெறவேண்டும் என்பதற்காக கல்லூரிகளை ஆரம்பிப்பதாக இராமநாதன் சட்டநிரூபனசபையில்ஆற்றியஉரை தமிழ் மக்களின் வளர்ச்சியில் அவர் காட்டிய அக்கறையை எடுத்துக் காட்டுகிறது என்றார்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைக்கழகத் தலைவர் கலாநிதி சபா ஜெயராசா பேசும்போது, ஒரு பெண்ணுக்கு கல்வியூட்டுவது ஒரு குடும்பத்தை, ஒரு சமுதாயத்தை வாழவைப்பதாக அமையும் எனக் கருதியே இராமநாத வள்ளல் பெண்களுக்கான கல்விச்சாலையை அமைத்தார் என்றார்.

இராமநாதன் சிலையை வடித்த சிற்பி திரு. வை. சிவசுப்பிரமணியத் (ரமணி) தை தங்கப் பதக்கம் அணிவித்து பொன்னாடை போர்த்தி திரு. சபா. ஜெயராசா கௌரவித்தார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் வெளியீட்டு உரையையும், பேராசிரியர் கலாநிதி சு. சண்முகதாஸ் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தினர்.

செயலாளர் திரு. அ. நாகராசா நன்றி கூறினார். -109-ரி

# பல்கலைக்கழக புதிய அனுமதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 1993/94 கல்வியாண்டிற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கீழ்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்குப் பல்கலைகழக மானிய ஆணைக்குழுவால் பெயர்ப் பட்டியல அனுப்பப்பட்டுள்ளது.

அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் யாழ். பல்கலைக்கழக தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் தங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அனுமதிக்கப்பட்ட துறையும், மாணவர்கள் தொகையும் வருமாறு:

கலை -6 முகாமைத்துவம்-5, வர்த்தகம்-11, உயிரியல் விஞ்ஞானம்-15, பௌதிக விஞ்ஞானம்-47, -ரி

# யாழ். குடா நாட்டில் மண்ணெண்ணை தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் மண்ணெண்ணைக்கு திடீரெனத் தட்டுப்பாடு நிலவிவருகிறது. ஒரு லீற்றர் மண்ணெண்ணை 28 ரூபாவாக விற்பனை செய்து வந்த போதிலும் யாழ். நகரில நேற்று திடீரென ஒரு லீற்றர் மண்ணெண்ணை 40 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை மண்ணெண்ணைக்கு பலத்த தட்டுப்பாடுநிலவுவதாகவும் தனியார் வர்த்தக நிலையங்களுக்கு கொழும்பிலிருந்து மண்ணெண்ணை எடுத்து வராமையே இதற்குக் காரணமென்றும் தெரிவிக்கப்படுகிறது. 162-சி

# வைத்தியர்கள் சங்கம் வேலை நிறுத்தம்

[கொழும்பு]

உதவி மற்றும் பதிவு செய்த வைத்திய அதிகாரிகள் சங்கம் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளது

வேலைநிறுத்தம் செய்பவர்கள் வேலைக்குத் திரும்பினால், தற்போது நியமிக்கப்பட்டுள்ள தனிநபர் ஆணைக்குழுவை உடனடியாகச் செயல்படுத்தப் போவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு வழங்க சுகாதாரச் சேவைத் தொழிற் சங்கங்கள் பல தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் அரசாங்கம் ஒன்று தற்போது பதவிக்கு வந்ததினால் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற அந்த அரசாங்கத்தால் முடியும்என தொழிற் சங்க அதிகாரிகள் கூறுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் சுகாதார சேவைகளைப் பேணிவருவதற்கு உதவி வருவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார் [ம-ரி]

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்கள வங்கி ஊழியர்களுக்கு கடந்த 1990ம் ஆண்டு ஆனி மாதம் முதல் வழங்கப்பட்ட கஷ்ட நிவாரணப்படி பணம் இன்றுவரை யாழ் மாவட்டத்தில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு கிடைக்கவில்லை,

இப்பணம் தமக்கும் கிடைக்கும் என இதுவரை காலமும் எதிர்பார்த்திருந்தபோதும் தற்போது ஏமாற்றமும், மனவேதனையும் அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் அசமந்தப் போக்கை நீக்கி உடன் இப்பணத்தை ஆசிரியர்களுக்குப் பெற்றுக் கொடுக்க செயற்பட்டு ஆவன செய்யும் வண்ணம் யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஆசிரியர்கள் கேட்டுள்ளனா. 154-சி

# புதிய அரசு ஆட்சிக்கு வந்தபோதும நாட்டில் பத்திரிகை சுதந்திரம் இல்லை

(லண்டன்)

இலங்கையில் பத்திரிகை சுதந்திரம் அநேககாலமாக இருந்ததில்லை. தற்போதும் அதேநிலைதான் தொடர்கிறது. இந்த அரசாங்கம் பதவிக்கு வரமுன் பத்திரிகைச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும் என கூறி ஆட்சிக்கு வந்த பின்பும் இன்னும் அதனைச் செய்யவில்லை.

சுதந்திர பத்திரிகையாளர் சங்கத் தலைவர் லூசியன் கருணநாயக்க பி.பி.சி,தெற்காசிய சேவைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் எப்படி அரசாங்கம் தனது தேர்தல் பிரசார வேலைகளுக்கு அரச ஒளிபரப்பு சேவையை பயன்படுத்தியது என்பதை ஆராய்ந்தால் தற்போதும் சுதந்திரமான தகவல்சேவை இல்லை என்பது புலனாகும்.

அரசாங்கம் முன்னர் கூறியதை அமுல்படுத்தவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாடாளுமன்றத்தில் சட்டம் இதற்கென கொண்டு வந்து ஏரிக்கரை பத்திரிகையை ஒரு நம்பிக்கை ஸ்தாபனத்திடம் ஒப்படைத்து சுதந்திரமாக இயங்கவிடவேண்டும்.

நடந்து கொண்டு இருக்கும் உள்நாட்டு போரைப் பற்றி மக்களுக்கு உண்மையான நிலை தெரியாமலுள்ளது. அரசாங்கத்தால் பத்திரிகைகள் நடத்தப்படுவதால், மக்களுக்கு என்ன தெரிய வேண்டுமென அரசு நினைக்கிறதோ அதை மாத்திரம் தெரியப்படுத்துகிறது. உண்மைநிலை சரியாக தெரிவதில்லை. தகவல் சாதனங்கள் சுதந்திரமாக இயங்குமேயானல் மோதல்களை விஸ்வரூபமெடாது தீர்க்கக் கூடியதாக அமையும்.

சுதந்திரமாக இயங்குதல்என்பது அரச கட்டுப்பாடு அரச சட்டங்களுக்கு அமையாது இயங்குதலாகும். அப்படியாயின் ஜனநாயக உணர்வுள்ள மக்களாகிய நாம் ரெலிவிசன், றேடியோ பத்திரிகைகளை அரச கட்டுப்பாடு இன்றி சுதந்திரமாக பயன்படுத்தி எங்கள் அபிப்பிராயங்களை தெரிவிக்க உதவியாக இருக்கும். மக்களின் அபிப்பிராயங்களை தெரிவிக்க சுதந்திரமான அமைப்பு இருப்பது கட்டாய தேவையாகும் என மேலும் அவர் தெரிவித்தார்.

கே-சி

## வருடாந்தக் கூட்டம்

(பருத்தித்துறை)

வடக்கு - கிழக்கு மகாண சபைகளின் சமூக சேவை உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 15-ந் திகதி நல்லூர் பிரதேச செயலத்தில் நடைபெறும். -22

# குழந்தைகளை பாதிக்கும் மலேரியா காய்ச்சல்

வைத்திய கலாநிதி
எஸ். பி. ஆர். சீர்மாறன்

(குழந்தை வைத்திய நிபுணரும், மருத்துவபீட குழந்தை மருத்துவப்பிரிவுத் தலைவருமான டாக்டர் திருமதி வி. எம்: கருணாகரன் அவர்களுடனான நேர் முகங்காணலின் தொகுப்பு இங்கு தரப்பட்டுள்ளது)

நாள்தோறும் ஏறக்குறைய பத்து குழந்தைகள் என்கின்ற ரீதியில் மாதமொன்றிற்கு முன்னூறு குழந்தைகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப் படுகின்றார்கள். இதில் இருநூறு குழந்தைகள் வரை மலேரியாக்காய்ச்சலினாலேயே பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் மலேரியா உலகளாவிய பிரச்சனை மாத்திரமல்ல எமது பிரதேசத்திலும் பலருக்கு குறிப்பாக குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற மிக முக்கியமான மருத்துவப் பிரச்சனையாகும். மலேரியாக் காய்ச்சல் ஏற்பட்ட குழந்தைகளுக்கு பல வேறுவிதமான பிரச்சனைகள் ஏற்படலாம்,

காய்ச்சல் இடையிட்டு விட்டும் தொடர்ச்சியாகவும் ஏற்படும், கடுமையான இருமல் சளி நியூமோனியாக்காய்ச்சல் போன்ற சில குழந்தைகளுக்கு ஏற்படும், வயிற்றோட்டம் சிலருக்கு இருக்கும், வயிற்றில் நோ, வயிற்றில் வலி, அடிக்கடியும் கடுமையான வாந்தி, வாந்தியுடன் சில வேளைகளில் இரத்தமாக கறுப்பாக வெளியேறுதல், வயிற்றோட்டத்துடன் மலம் கறுப்பாக வெளியேறுதல். சிறுநீர் கடும்சிவப்பாக, கறுப்பாக செல்லல், குழந்தைகளுக்கு காய்ச்சல் அதிகரித்து வலிப்பு ஏற்படுதல், மற்றும் ஏற்கனவே வலிப்பு ஏற்படுகின்ற குழந்தைகளுக்கு அடிக்கடி வலிப்பு ஏற்படுதல், மூளை மலேரியாக் காய்ச்சல் ஏற்பட்டு ஆழ்ந்த மயக்கம் (Coma) மரணம் ஏற்படுதல், மலேரியாக் கிருமிகள் குழந்தைகளின் இயற்கையான நோயை எதிர்க்கின்ற சக்தி குறைந்து நலிவடைவதனால் நெருப்புக்காய்ச்சல் வயிற்றோட்டம் கசநோய் என்பன கூட ஏற்படுகின்றது.

## இப்போது ஏன் அதிகரித்துள்ளது?

மலேரியாக் காய்ச்சலை ஏற்படுத்துகின்ற கிருமிகள் நான்கு வகைப்படும். இவை பிளாஸ்மோடியம் குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். பிளாஸ்மோடியம் ஃபல்சிபாரம் பிளாஸ்மோடியம் வைவக்ஸ் பிளாஸ்மோடியம் ஓவாலே பிளாஸ்மோடியம் மலேரியா என நான்கு வகையான கிருமிகள் இருந்தாலும் எமது பிரதேசத்தில் பி.வைவக்ஸிம், பி.பல்சிஃபாரத்தினுலுமே மலேரியாக் காய்ச்சல் ஏற்படுகின்றது. இதிலும் பி.பல்சி-ஃபாரம் கிருமிகளினுலேயே மிகவும் கடுமையான காய்ச்சலும், மரணங்களும் ஏற்படுகின்றது.

ஆனாலும் இந்தக் கிருமிகளை ஒருவரிலிருந்து இன்னுமொருவருக்கு அனோபிளிஸ் கியூலிபேஸிஸ் என்கின்ற பெண்நுளம்பே கடத்துகின்றது. இந்த நுளம்பு தனது இனத்தைப் பெருக்குவதற்கு தேங்கி நிற்கின்ற சூரியவெளிச்சம் படுகின்ற நன்னீரையே நம்பியிருக்கின்றது. இந்த நீரிலேயே தனது முட்டைகளை இட்டு தனது இனத்தைப் பன்மடங்காகப் பெருக்குகின்றது. எனவே இப்போது மழைகாலம்; ஆங்காங்கே குளங்களிலும், குன்றுகளிலும் மற்றும் வீட்டைச் சுற்றி பின்புறத்திலும் அயல்வளவுகளிலும் கிடக்கின்ற உடைந்த போத்தல்கள், தகரப்பேணிகள், சிரட்டைகள் வாளிகள் பிளாஸ்டிக் குவளைகள் என்பவற்றிலும் அடைபட்டுக் கிடக்கும் கானகளிலும் தேங்கி நிற்கும் மழைநீரில் இந்த அனோபிளிஸ் பெண் நுளம்பு தனது முட்டைகளைத் தாராளமாக இட்டு பெருமளவில் பெருகும்.

மேலும் மழைகாலமென்பதனால் புற்களும் புதர்களும் மிகத்துரிதமாக வளர்வதை நாம் அறிவோம். பகல்வேளையில் இந்த வளர்ந்து விட்ட புற்களிலேயே நுளம்புகள் தங்கி அறுதல் எடுக்கும். மற்றும் வீட்டின் தாழ்வாரங்கள், உட்புற சுவர்கள், கதவுகள், யன்னல்களுக்கு அலுமாரிகளுக்குப் பின்னால் களஞ்சிய அறைகளில் பகல் வேளைகளில் தங்கிநிற்கும். தனது உயிர் வாழ்க்கைக்குத் தேவையான உணவிற்கு மனிதனுடைய இரத்தத்தையே நம்பியிருக்கின்றது. எனவே மாலைவேளைகளில் எம்மைத்தேடி வருகின்றது. எம்மைக் கடித்துஉறிஞ்சுகின்றபோது எமது இரத்தத்தினுள் மலேரியாக் கிருமிகளையும் தந்துவிட்டுப்போகின்றது. மேலும் ஒருவருக்கு மலேரியா இருக்கின்றபோது இரத்தத்துடன் கிருமிகளையும் சேர்ந்தே உறிஞ்சுகின்றது. இவ்வாறே மலேரியா ஒருவரிலிருந்து இன்னொருவருக்கும் ஏனையோருக்கும் பரவுகின்றது.

## ஆபத்துக்கள்

மலேரியாக் கிருமிகள் மனிதனுடைய உடலில் பல்வேறுவிதமான பலமோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. மனிதனுடைய ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நல்ல இரத்தம் அவசியமாகும். மலேரியாக்கிருமிகள் இரததக் கலங்களை குறிப்பாக செங்குருதிக்கலங்களை(RBC) அளிப்பதனால் கடுமையான இரத்தச்சோகையும், இரததக் குறைபாட்டினால் பல பிரச்சனைகளும் ஏற்படும். மேலும் எமது உடலில் நோயைஎதிர்க்கின்ற பாதுகாப்புச்சக்தி Immune system இருக்கின்றது மலேரியாகக் கிருமிகள் இதனை இலகுவில் நலிவடையச் செய்துவிடும். குழந்தைகளிலும் சிறுவர்களிலும் இது மிகவும் ஆரம்ப நிலையிலேயே இருப்பதனால் மலேரியா ஏற்பட்டால் குழந்தைகளின் நிலை இன்னும் மோசமடையும் இதனால் குழந்தைகளுக்கு மலேரியா ஏற்படுகின்றபோது இயற்கையான பாதுகாப்புச் சக்தி பாதிக்கப்பட்டு ஏனைய வியாதிகளான நெருப்புக் காய்ச்சல் வயிற்றோட்டம், கசநோய் என்பன ஏற்படவும் செய்கின்றது. குழந்தைகளில் செப்ற்றிஸிமிய Septicaemia கூட ஏற்படும்.

## சிகிச்சை முறை

குழந்தைகளுககும் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கும் காய்ச்சலும், காய்ச்சலுடன் இருமல் வாந்தி, வலிப்பு வயிற்றோட்டம் என ஏதேனும் ஏற்பட்டால் அனேகமாக மலேரியாக் காய்ச்சலாகவே இருக்கும். குளோரோகுயின் என்கின்ற குளிசை ஏறக்குறைய 90சத வீதம் பலனளிக்கின்றது 150 மி. கி எடை கொண்ட குளிசைகள் 12 வயதிற்கு மேற்பட்டோருக்கு 4 குளிசைகளும், ஃ 5-12 வயதினருக்கு 2 குளிசைகளும் ஃ 2-4 வயதினருக்கு ஒரு குளிசையும் ஃ ஒரு வயதிற்குக் குறைந்த குழந்தைகளுக்கு அரைக் குளிசையும் கொடுக்கப்படும். ஆறு மணித்தியாலங்களின் பின்னர் அதேயளவு குளிசை மீண்டும் பின்னர் அடுத்த நாளிலிருந்து ஐந்து நாட்கள் வரை அரைப்பங்கு கொடுக்கப்படும்.

கர்ப்பிணித்தாய்மார்களுக்கு மலேரியாக் காய்ச்சல் ஏற்படுகின்றபோது குளோரோகுயின் குளிசைகள் நான்கு கொடுப்பதுடன் பின்னர் 6 மணித்தியாலங்களில் மீண்டும் 4 அடுத்த ஐந்து நாட்களுக்கு 2 குளிசை வீதமும் கொடுத்து பின்னர் குழந்தை பிறக்கும் வரைக்கும் கிழமைதோறும் இரண்டு குளிசைகள் வீதம் கொடுக்கப்படும், இதன் மூலம் பிறக்கப்போகின்ற குழந்தைகளுக்கு மலேரிய ஏற்படுவதைத் தடுக்கலாம். கர்ப்பிணித்தாய்க்கு பிறிமாகுயின் என்கிற குளிசைகொடுக்கப்படல் கூடாது. ஏனெனில் இது குழந்தையில் பிறப்புக் குறைபாடுகளை ஏற்படுத்திவிடும்.

## தடுப்பதற்கு

### ஆலோசனைகளும்

நுளம்பு தேங்கிநிற்கின்ற நன்னீரிலேயே பெருகுவதனால் எமதுவீட்டுபுறசுற்றத்தை அடிக்கடிசுத்தம் செய்யவேண்டும். பழைய பொருட்களை கிடங்கு வெட்டி புதைத்தல் நல்லது, புற்களை அடிக்கடி வெட்டி சுத்தமாக வைத்திருக்கவேண்டும். நுளம்பானது ஏறக்குறைய ஐந்து மைல் தூரம் பறக்ககூடியதென்பதனால் இதில் அனைவரினதும் ஒத்துழைப்புத் தேவையாகும்.

ஃ நுளம்பு வலை, நுளம்புத்திரி பயன்படுத்தலாம்.

ஃ காய்ச்சல் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றபோது நேரம் தாழ்த்தாது உடன் சிகிச்சை பெறல் வேண்டும்.

ஃ WHO என்கின்ற உலக சுகாதார நிறுவன ஆய்வின்படி மலேரியாக் கிருமிகளை 90 நிமிடங்கள் நுணுக்குக்காட்டியில் பார்த்தாலே கண்டுபிடிக்கலாமாம். அதுவும் 3சதவீதம் மாத்திரமே. எனவே இரத்தப் பரிசோதனையை தவிர்க்க செய்யவேண்டுமெனக் கூட கருதுகின்றார்கள்.

ஃ எனவே இரத்தப் பரிசோதனையை நம்பியிருக்காமல் மருத்துவ சரித்திரத்தையும் வருத்த நிலையையும் அடிப்படையாகக் கொண்டு சிகிச்சையை உடன் ஆரம்பிக்க வேண்டும். . சி

---

## சமஸ்கிருத வகுப்புகள்

(கொழும்புத்துறை)

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்கான சமஸ்கிருத பாட வகுப்புகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்று வருவதாக யாழ். கல்வி வலயம் ஒன்றிற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இப்பாடத்தைக் கற்கவிரும்பும் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களை அங்கு அனுப்பி இப்பாட நெறியைப் பயில அனுமதிக்குமாறு இவர்களுக்கு அவர் தெரிவித்தார். 154

## சைவப் புலவர் தொகுப்பு நூல்

(வட்டுக்கோட்டை)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் வரலாறும் சைவப்புலவர்களின் விபரங்களும் அடங்கிய தொகுப்பு நூல் ஒன்றை விரைவில் வெளியிட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க விசேட பொதுக் கூட்டம் ஒன்று யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் சங்கத் தலைவர் வித்துவான், பண்டிதர் திரு. இரா. திருநாவுக்கரசு தலைமையில் கடந்த 3ம் திகதி நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கம் நடாத்தும் சைவப் புலவர் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாதவர்கள் பலர் தாம் சைவப்புலவர்கள் எனப் பயன்படுத்தி வருவது குறித்து இக்கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. 139-சி

## கிளித்தட்டு போட்டி முடிவுகள்

(உடுவில்)

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையே இவ்வருடம் நடத்தப்பட்ட கிளித்தட்டுப் போட்டிகளில் ஆண்டு ஐந்து ஆண்-பெண் பிரிவுகளில் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயமும் 13வயதுப் பிரிவு ஆண்-பெண் பிரிவு களில் மயிலணிசைவ வித்தியாலயமும் முதலிடத்தை பெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டிகளில் உடுவில் கல்விக்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. வி; இராசையா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றியீட்டிய பாடசாலை அணிகளுக்கான வெற்றிக்கிண்ணங்களை வழங்கினார்,

விளையாட்டுச் செயலாளர் திரு. சி. மகாலிங்கம் போட்டிக்கான ஒழுங்குகளை நெறிப்படுத்தினர்.

இவ்வாண்டு வெற்றியீட்டிய பாடசாலை அணிகளின் விடரம் பின்வருமாறு.

5ஆம் ஆண்டு ஆண்கள் - 1 சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் 2. உடுவில் அ. மி. த. க. பாடசாலை 3. உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.

5ஆம் ஆண்டு பெண்கள் 1. சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் 2. ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம். 3. கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை. 13வயதுப்பிரிவு ஆண்கள்: 1. மயிலணி சைவமகாவித்தியாலயம் 2. உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்2 3. உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை 13 வயதுப் பிரிவு-பெண்கள் 1. மயிலணி சைவ மகாவித்தியாலம் 2. கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலை 3. உடுவில் இராமநாதன் கல்லூரி. -109

## தீவகத்தில் ஈ.பி.டி.பி.யினால் பொதுமக்கள் தாக்குதல்

(ஆனைப்பந்தி)

தீவகப் பகுதிகளில் ஈ. பி. டி. பியினரால் அப்பாவிப் பொதுமக்கள் காரணமின்றித் தாக்கப்படுவதாக தெரிய வருகின்றது.

ஈ. டி. பி.யினரின் மோசமான நடவடிக்கைகளை தட்டிக்கேட்க முயன்ற பலரை தாக்கிவிட்டு நான்கைந்து நாட்களுக்கு இருட்டறையில் அடைத்து விடுகின்றனராம்.

இவ்வாறு கைது செய்யப்பட்டோரில் ஒரு சிலரை சிறிலங்கா இராணுவத்தினரிடம் ஒப்படைத்து விட்டு அவர்களைவிடுவித்துவிட்டதாக அவர்களின் குடும்பத்தினருக்கு தெரிவிக்கின்றனராம்.

சிலமாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற சிறிலங்கா பாராளுமன்றப் பொதுத் தேர்தல், ஜனதிபதித் தேர்தல்களின் பின்பு தீவகத்தில் ஈ. பி. டி. யினரின் தாக்குதல் கள் அதிகரித்துள்ளதாகவும் இதனால் மக்கள் பெரும் இன்னல் அடைவதாகவும் அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. - 101

## ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினரின் பயன்பாட்டிற்காக சுகாதார இலாகா ஊடாக பிரித்தானிய உதவித் திட்டத்தின் கீழ் 17 கே வி வலுக்கொண்ட ஜெனரேற்றர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஜெனரேற்றர் மூலம் அத்தியாவசிய சேவைகளுக்கான மின் விநியோகம் மேற்கொள்ளப்படும்.

அரியாலை நெடுங்குளம், பாஷையூர், யூபிலிசென்ரர், குருநகர். பொம்மைவெளி ஆகிய இடங்களிலுள்ள பிரசவ விடுதிகளுக்கும் மற்றும் தீயணைக்கும் பகுதி, நீர் விநியோகப்பகுதி ஆகியவைகளுக்கும் இந்த ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 162-ரி

## புனரமைப்பு

(பருத்தித்துறை)

கரவெட்டி கல்விக் கோட்டத்திலுள்ள ஞானசாரியார் கல்லூரியின் கட்டிட புனரமைப்பு வேலைகள் 4 இலட்சம் ரூபா செலவில் நடைபெற்று வருகின்றன. வடக்கு கிழக்கு மாகாணசபை கல்வித் திணைக்களம் இந்நிதியினை ஒதுக்கீடு செய்திருந்தது. -52

# இலங்கையில் 30,000 ஆசிரியர்கள் தினமும் லீவில் நிற்கின்றனர்

## கல்வி அமைச்சு மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையில் தினமும் 30,000 ஆசிரியர்கள் லீவில் நிற்கின்றனர் என்ற அதிர்ச்சியான செய்தி கல்வி அமைச்சினுல் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் மூலம் தெரிய வந்துள்ளது.

உலகில் நான்கு கோடி பேர் புனிதமான ஆசிரியத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். இலங்கையில் 1,97,000 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் தினமும் 30,000 ஆசிரியர்கள் லீவில் நிற்கின்றனர்.

லீவு பெறுகின்ற ஆசிரியர்களை இனரீதியாகப்பார்க்கும் போது தமிழ் ஆசிரியர்கள் மிகவும் குறைவான வீதத்திலேயே லீவுபெறுவது குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் 25 வீதமான தமிழ் ஆசிரியர்கள் தினமும் லீவு பெறுகின்றனர். ஏனைய சமூகங்களை விடவும் தமிழ் இனத்தவர்கள் கல்வியில் முன்னணியில் திகழ்வதற்கு தமிழ் ஆசிரியர்களின் சேவை மனப்பாங்கே காரணமாய் அமைந்துள்ளது என்று கல்விப்பணிப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கல்வி நடவடிக்கைகளுக்காக அரசின் மொத்த வருமானத்தில் ஐந்து சதவீதமான தொகை செலவு செய்யப்படுகின்றது. உலகிலேயே கல்விக்காக கூடிய பணத்தை செலவிடும் முதலாவது நாடாக ஜப்பானும் இரண்டாவது நாடாக இலங்கையும் திகழ்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

### மணிவாக்கு

அறிவாளி தனக்கு நேரும் இடையூறுகளைப் புறங்காண்பதில் தான் கருத்தூன்றி நின்றிருப்பான். வெற்றி பெறுவதென்பது அவனுக்கு இரண்டாவது யோசனையே.

- கன்பூசியஸ்

## நமது நோக்கு

### தேசியப் பாடசாலைகள்

முன்னைய அரசு தமிழ் மக்களுக்குச் செய்து வந்த அநியாயங்களில் ஒன்று தமிழ்ச்சிறுர்ின் கல்வியைச் சிதைத்தமையே.

முன்பு இப்பத்தியிற் சுட்டிக்காட்டியபடி, அவுஸ்திரேலியாவிற் குடியேறி ஆக்கிரமிப்புச் செய்வர்கள், அங்கு வாழ்ந்த பழங்குடியினரை அடக்கி ஒடுக்கச் செய்த 'கைங்கரியங்களில்' ஒன்று அவர்களின் கல்வி வாய்ப்பைத் தடுத்தமையே.

அதேபோன்று இங்கும் தமிழ்ச் சிறுர்களின் கல்வி வாய்ப்புகளைச் சிதைத்து விட்டால், அறிவற்ற சமுதாயமாக்கிவிட்டால், விடுதலை உணர்வை நசுக்கிவிடலாம் என்று கணித்துத்தான் செயற்பட்டார்கள்.

அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றுதான் தமிழ்ப் பகுதிகளில் தேசியப் பாடசாலைகள் அமைப்பதிற் காட்டிய அலட்சிய மனப்பான்மை!

நாட்டில் 160 தேசியப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. ஆனுல், தமிழ்ப் பகுதிகளான மன்ஞர், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில ஒன்றுதானும் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

தேசியப் பாடசாலை என்பது பல வளங்களைக் கொண்டது. தேர்த்தெடுக்கப்பட்ட மாணுக்கருக்கு உயர்கல்விக்கு இட்டுச் செல்லக் கூடிய தான வாய்ப்புகளை அளிப்பது

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் அவ்வாறுதான் அமைய வேண்டும் என்பது உயர் இலட்சியம். ஆனுல் நாட்டின் பொருளாதார வளக்குறைவு அமைக்க முடியாத பரிதாப நிலை.

தற்போது - கல்வி அமைச்சு இந்தக் குறைபாட்டை நீக்க, புறக்கணிப்பைத் தவிர்க்க மேற்குறிப்பிட்ட மாவட்டங்களிலும் தேசியப் பாடசாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் செய்தி வந்துள்ளது.

வெறும் பெயர்ப்பலகை மாற்றம் செய்தாற் போதாது. தெற்கிலே உள்ள தேசியப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட அதே வசதிகள் இங்கும் வழங்கப்பட வேண்டியது அவசியம்.

ஏனெனில் - பாதுகாப்பு என்ற போலிக் காரணம் கூறிக் கொண்டு ஆய்வுகூட இரசாயனப்பொருட்கள், கணணிகள் போன்ற பல கல்விச் சாதனங்கள் இங்கு வரத் தடுக்கப்பட்டதை நாம் மறப்பதற்கில்லை!

## பலதும் பத்தும்

### தரும நிதியம்

விநாயகர் தரும நிதியம் அண்மைக் காலமாக வெளியிட்டு வரும் சிறுநூல்கள், கையேடுகள் வளர்ந்துவரும் சமுதாயத்திற்கு நன்மை பயப்பன.

அறநெறிகளையும் ஆத்மீகச் சிந்தனைகளை மாத்திரமல்ல, சித்த மருத்துவம், மாணுக்கரின் பொதறிவ ஆகியவற்றையும் வளர்க்கத்துணைபுரிகின்றன.

அண்மையில் வெளியிட்ட அறநெறிச் சிந்தனைகள் பகுதி 11 என்ற நூலில் திருவாசகம், திருமந்திரம், நன்னெறி, உலக நீதி, வெற்றி வேற்கை, விவேக சிந்தாமணி, தாயுமான சுவாமி பாடல் ஆகியவற்றிலிருந்து தெரிந்தெடுத்தவைக்குக் கருத்தையும் எளிய நடையிற் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றில் சிலவற்றையாவது சிறுர்கள் மனனம் செய்ய வைப்பது பெற்ருேர் கடமையல்லவா?

—மயூரன்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994—12—09**
**வெள்ளி இரவு**

08-01 - கலைமஞ்சரி- நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம்; அறிமுக மாவது- காந்தரூபன் அறிவுச்சோலையின் 1ம் ஆண்டு நிறைவையொட்டி வெளியிட்ட மலர்'' அதனையடுத்து சிறுகதை தமிழ்க்கவி எழுதிய ''கருங்காலிப் பூக்கள்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை ந. கிருஷ்ஞ எழுதிய ''ஆகும் தமிழீழம்''
08-25 - கணப்பொழுது சி. கண்ணம்மா எழுதிய •வீரவேங்கை அன்பு"
08-30 - செய்திகள்
08-40 - அரசியல் அரங்கம் வே, பாலகுமாரன் எழுதிய ''அமைதி பற்றிய போதிப்பு ஆயுதத் தயாரிப்பில் பாதிப்பு''
08-50 - வாத்திய கானங்கள்
09-00 - இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994—12—10**
**சனி காலை**

07-02 - மாவீரவணக்கம்
07-15 - நீங்கள் கேட்டவை
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 - காலை நிகழ்ச்சிகள்கள் யாவும் நிறைவு பெறும்.

# "எமது பிரதேச வளர்ச்சியில் கூட்டுறவு சபைக்கு பங்குண்டு"

]யாழ்ப்பாணம்]

எமது தேசத்தின் வளர்ச்சிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை முக்கிய பங்கினை வகிதது வருகிறது.

இவ்வாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் தெரிவித்தார்.

கூட்டுறவுத் தந்தை அமரர் வி. வீரசிங்கத்தின் 30-வது ஆண்டு நினைவுதின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விழா கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெற்றது.

தேசியக் கொடியை தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் ஏற்றி வைக்க கூட்டுறவுக்கொடியை யாழ். பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா ஏற்றி வைத்தார். யாழ். கூட்டுறவுச் சங்க கொத்தணித் தலைவர்கள் மங்கள விளக்கை ஏற்றிவைத்தனர்.

திரு. டொமினிக் தொடர்ந்துஉரையாற்றுகையில், இன்றைய உலகு பல வகையிலும் முன்னேற்றகரமான செயல்களை மேற்கொள்ளும் இளைஞர்களைக் கொணடதாகும். எமது பிரதேசம் கூட்டுறவுத் துறைகளில் வியக்கத்தக்கமுன்னேற்றம் கண்டுள்ளது.

எமது மக்கள் இன்று ஒரு நல்ல சமாதானமான நிரந்தரமான தீர்வையே விரும்புகிருர்கள். தென் இலங்கையில் சிங்கள மக்கள் எந்தவகையான வாழ்க்கை வாழ்ந்து வருகிருர்களோ அதேபோன்ற ஒரு சுதந்திரமான வாழ்வையே எமது பிரதேசத்தில நாம் மேற்கொள்ள விரும்புகிறேம் எமது பிரதேசங்களில் சகல உரிமைகளும் உள்ள ஒரு சுதந்திர மனிதர்களாக வாழ்வதையேவிரும்புகிறேம். எமது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும்அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதேசசெயலர் கலாநிதி க, குணராசா உரையாற்றுகையில் சமுக மேம்பாட்டுக்காக எவர் ஒருவர் தன்னை அற்பணிக்கிருரோ அவர் மக்களால் நினைவுகூரப் படவேண்டியவராவர். இந்த வகையில் எமது பிரதேசத்தின் கூட்டுறவு வளர்ச்சியில் முன்னின்று உழைத்த அமரர் வீரசிங்கம் அவர்கள் நினைவுகூரப் படவேண்டியவர், எமதுவடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களாகும். இப்பிரதேசங்களுக்கு ஒரு எல்லை வகுக்கப் பட்டுள்ளது. நாம் இன்று கிழக்கு மாகாணம் அம்பாறையில் ஒரு பெரும் பகுதியை இழந்துள்ளோம். இது எமது கடந்தகால அரசியல் தலைவர்களின் தவறுகள் என்றே கூற வேண்டும் என்றும் கூறினுர். [162-]

## இராசி பலன்

**09 - 12 - 1994**
**வெள்ளிக்கிழமை**
**(தமிழுக்குகார்த்திகை23)**

ஸப்தமி மாலை 8-02 வரை; சதயம் நண்பகல் 12:32 வரை சித்தயோகம் காலை 10-47 முதல் 12-14 வரை சுபவேளை 6-14 முதல் 7-25 வரை

மேடம்: காரியசித்தி, சத்துருஜெயம், பணப்புளக்கம்.

இடபம்:தொழில் சுமுகநிலை சுபமுயற்சி, பயணம்,

மிதுனம்: மனஸ்தாபம், நண்பர் துரோகம், தயக்கம்.

கடகம்: குடும்ப வெறுப்பு, கைப்பொருள் இழப்பு. அமைதிக்குறைவு.

சிங்கம்; தொழில் லாபம், புதிய திட்டம், வாகன சுகம்.

கன்னி: வாக்குறுதியைகாப்பாற்றல், குடும்ப சுகம், விருந்து.

துலாம்: ஆரோக்கியம் குன்றல், இனப்பகை, மறதி.

விருச்சிகம்: தந்தையர் பகை, முரட்டு சுபாவம், அலைச்சல்.

தனுசு: தனப்பிராப்தி, நற்கருமம், பிறர் உதவி

மகரம்; உறவினர் விரோதம், அமைதிக்குறைவு, கடிதத்தொல்லை.

கும்பம், தொழில் சிறப்பு, கருத்து வேறுபாடு, தெய்வப் பணி,

மீனம்: மாமஞர் விரோதம் கடன்சுமை: குறைகேட்டல்.

ஜோஸ்யர்

## வெள்ளி விருந்து

### கோபத்திற்கு இடம் கொடுத்தால்

# நம்மை அழித்துவிடும்

தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தை ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிகம்பி லிருக்க லாமே.

இது திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய திருத்தாண்டகம். ஆரும் திருமுறை.

நம்முடைய பொய்வாழ்விற்கு எதிராக மெய் வழி காட்டுவதாகக் கருத்து அமைந்துள்ளது.

சுல்வி, நாகரீகம், புகழ், செல்வம் எதில் சிறந்தோங்கி இருந்தாலும் மனம் சுத்தமாகவில்லை. மனக்கசப்பு எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாகத்தானே இருக்கிறது.

பெற்ருேர்கள் பிள்ளைகளோடு பேசுவதில்லை. பிள்ளைகளுக்கு பெற்ருேரை பேணுவதில் அக்கறை இல்லை உடன்பிறந்த சகோதரர்களிடத்தில் மனக்காழ்ப்பு, கசப்பு, இல்லத்தில் நிகழும் நல்ல நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற மனம் எழுவதில்லை.

ஆலயங்களில்கூட முகத்தைத் திருப்பிக்கொண்டு நிற்றல், அல்லது கோபக்காரர்கள் என்று விழாக்களில் கலந்துகொண்டு வழிபாடு செய்யாது ஒதுங்கி இருத்தல், குற்றம் பார்க்கில்சுற்றம் ஏது? ஆன்ம ஒடுக்கம் ஏது?

மனக்கசப்பை அல்லது கோபத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். தீ பொறி தானே என்று வீட்டுக்கூரையில் செருகிவிடலாமா? அதேபோலத்தான் மனத்தில் மனக்கசப்பிற்கு சிறு கோபத்கிற்கோ இடம் கொடுத்து வருவோமேயாஞல் அதுநம்மை விழுங்கி விடும். அப்பரடிகளாருடைய திருத்தாண்டகத்தை நாளிலும் பொழுதிலும் ஓதிவரின் மனத்தை வளமாகப் பண்படுத்தலாம்.

— சிவ. சண்முகவடிவேல்

## இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டமனுறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று 9:ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2 30 மணியளவில் 'பண்ணிசையும் முருகன் பக்திப் பாடலும் என்ற விடயத்தில் சிவசிறி செ. விசுவநாதக்குருக்கள் பக்கவாத்திய சகிதம் இசை நிகழ்வு வழங்க இருக்கின்ருர். அறிமுக உரையை ஆசிரியர் சி. சிவலோகம் வழங்குகின்ருர். (ம)

**வீடுதோறும் அணை அமைத்தே – நாம் வீதியோரம் நீரை தேக்கவிடோம்**

தீர்வை முன்வைக்குமாறு

# புலிகளுக்கும் அரசுக்கும் கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கான தீர்வு யோசனைகளை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தாமத மின்றி தனித்தனியாக முன் வைக்கவேண்டும்,

கொழும்பில் இன்று வெள் ளிக்கிழமை மககள் சமாதான விழாவையும் சமாதான யாத் திரையையும் ஒழுங்கு செய்தி ருக்கும் சுமார் 40 அரசசார் பற்ற தொண்டர்

கள் இவ்வாறான நிறுவனங்கள் கோரிக்கை ஒன்றை வெளி யிட்டிருக்கின்றன. ;கே-இ

# வடக்கு கிழக்கு போரினால் இளைஞர் தொகை குறையும்!

## சமூக சேவைப் பிரிவு தெரிவிப்பு!

(கொழும்பு)

இலங்கையில் வருங்காலத் தில் இளைஞர்களின் தொகை மிகக்குறைவாகவே இருக்கு மென்று இலங்கையின் சமூக சேவைப்பிரிவு தெரிவித்துள் ளது.

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தினால் இளைஞர்கள் இறந்து வருவதினால இரண் டாயிரம் ஆண்டளவில் ஒரு கோடியே 75 லட்சமாக இரு க்கும் இலங்கையின் சனத் தொகையில் 60 வீதமானோர் வயோதிபர்களாகவே இருப் பார்கள் என்று சமூகசேவைப் பிரிவு தனது வருடாந்த அறி க்கையில் குறிப்பிட்டுள்ளது. வி-இ

## மட்டு அம்பாறையில்

# மீண்டும் வெள்ளம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் நிவாரணப் பணிகள் பாதிப்படைந்துள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மீண்டும் அடைமழைபெய்வதினால் முன் னர் பாதிககப்பட்ட பொது மக்கள் மீண்டும் அகதிகளாக பாடசாலைகளிலும் மற்றும் இடங்களிலும் தஞ்சம் புகுந் துள்ளனர்,

கடந்த மாதத்திலிருந்து இதுவரை இப்பகுதிகளில் மூன்றுவது தடவை பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வி இ

### அரச அதிபர்கள் இடமாற்றம்

[கொழும்பு)

வடபகுதியில் உள்ள அனை த்து அரசாங்க அதிபர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள் ளனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கே. பொன்னம்பலம் யாழ் மாவட்டத்துக்கும், வவுனியா மாவட்ட அரச அதிபர் தில்லை நடராசா கிளிநொச்சி மாவட்டத்துக் கும் மன்னார் மாவட்ட அரச அதிபர் கணேஷ் வவுனியா மாவட்டத்துக்கும் மன்னார் மாவட்டத்துக்கு குறாசும் அரச அதிபர்களாக நியமிக் கப்பட இருப்பதாக அரசு அறிவித்துள்ளது. வி-இ

### உணவு முத்திரை விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

வறுமை நிவாரண முத் திரை பெறாத பாடசாலைக் குச் செல்லும் 5 முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட பிள் ளைகளை உடைய குடும்பத் தலைவர்கள் தத்தமது பிரிவில் உள்ள கிராம அலுவர்களு டன் எதிர்வரும் 12ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கொண்டு தமது பிள்ளைகளு க்கு உணவு முத்திரை பெற் றுக்கொள்வதற்கு விண்ணப் பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் சமர்ப்பிக் கப்படும் விண்ணப்பங்களுக்கு உணவு முத்திரை வழங்கமுடி யாது என அறிவிக்கப்பட்டுள் ளது. இ

### புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவுப்பாதைபோக்கு வரத்திற்கு திறந்து விடப் படும்பொழுது இராணுவ சோதனை எதுவும் நடதவப் படக்கூடாது என்பது ஏற் கனவே இப்பாதை திறப்புத் தொடர்பாக புலிகள் தமது கருத்தை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாதையில் பயணம் செய்யும் அனைவரும் இரா ணுவ சோதனையுடனே தமது பயணத்தை தொடரவேண் டும் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளதும் குறிப் பிடத்தக்கது. (சி-ரி-இ)

### புலிகள்மீது துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவமுகா மினுள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் மூவர் இராணு வத்தினரின் துப்பாக்கிப் பிர யோகத்திற்கு இலக்காகி உயிரிழந்ததாக பாதுகாப்ப மைச்சை மேற்கோள்காட்டி 'வெரித்தாஸ்' நேற்று தெரி வித்தது. க-இ

வானொலி - ரூபவாஹினியில் வெளியான

# ஆனையிறவு பாதை திறப்பு அரசு அறிவிப்பல்ல

(கொழும்பு)

ஆனையிறவுப் பாதை திறப்பு சம்பந்தமாக இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத் தாப னம் வெளியிட்ட செய்தி அரசாங்கத்தின் அறிக்கை யல்ல.

பிரதி பாதுகாப்பு அமைச் சர் கேணல் அனுருத்த ரத் வத்த நேற்று நாடாளுமன் றத்தில் இவ்வாறு தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக் கையில் அமைச்சர் மேலும் கேணல் ரத்வத்த தெரிவித்ததாவது.

இனப்பிரச்னைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண் பதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

இதுசம்பந்தமாக மேற் கொள்ளப்படும் சகல முயற்சி களும் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். க இ

### திருமலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதால் எழுந்துள்ள நெரு க்கடி நிலை தொழிலாளர் மத் தியில் அமைதியற்ற ஒரு சூழ் நிலையை அங்கு உருவாக்கியி ருப்பதாக சிங்கப்பூர் அரசங் தெரிவித்தது.

இதனையடுத்து மா ஆலை மூடப்பட்டதாகவும் அறிவிக் கப்பட்டது.

நேற்றுக்காலைதொழிற்சாலை அதிகாரிகளை ஒரு சிங்கப்பூர் தொழிலாளியும், ஹொங் கொங் தொழிலாளியும் இலங் கைத் தொழிலாளியும் கத்தி முனையில் மிரட்டி வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியரை வேலைக்கமர்த்துமாறு மிரட்டி யதாக தெரிவிக்கப்படுகின் றது.

வெரித்தாஸ் வானொலி சிங் கப்பூர் நிறுவன அதிகாரி கள் த்தப்பட்டதாக அறிவித் தது எனினும்எந்தவொரு சிங் கப்பூர்பிரஜையும் கடத்திச் செல்லப்படவில்லையெனசிங்கப் பூர்அரசுஅறிவித்தது. எஸ்-இ

# தமிழ்நாடு அரசைக்கலைக்க

## ஆளுநர் சென்னாரெட்டி முயற்சி!

(சென்னை)

தமிழ்நாட்டில் சட்டமும், ஒழுங்கும் மிகவும் சீர்குலைந்து விட்டது என்பதை மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி தமிழக அரசைக் கலைக்கச் செய்யும் நோக்குடன் தமிழ் நாட்டு ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி நேற்று புது டில்லி சென்றுள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டமும், ஒழுங்கும், மற்றும் அரசியல் சாசனமும் சீர்குலைந்து விட் டது என்பதை ஆதாரங்களு டன் ஜனாதிபதிக்கும், பிரதம மந்திரிக்கும் எடுத்துக்கூறுவ தற்காக சென்னாரெட்டி புது டில்லி சென்றுள்ளார்.

சட்டமும், ஒழுங்கும் தமிழ் நாட்டில் சீர்குலைந்துவருகின் றது என்று ஆளுநர் சென்னா ரெட்டி பல தடவைகள் மத் திய அரசுக்கு தெரிவித்திருந்த போதும் மத்தியஅரசு அதைப் பெரிதாகக் கருதவில்லை,

தேர்தல் ஆணையாளர் ரி.என். சேஷன், தமிழ்நாட்டு க்கு அண்மையில் வந்தபோது சென்னையில் உள்ள ஹோட் டல்கள் அனைத்தும் அவருக்கு தங்குவதற்கு இடமளிக்க மறுத்துவிட்டன.

இது தமிழக அரசினாலேயே மறைமுகமாக செயற்படுத்தப் பட்டதாம்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ஹரி பாஸ்கரின் பதவிக் காலத்தை தமிழக ஆளுநரின் அனுமதியின்றி முதல்வர் செல்வி ஜெய லலிதா நீடித்தது; ஆளுநரின் அனுமதியின்றி தமிழக அமை ச்சரவையில் மாற்றங்கள் செய் யப்பட்டது உட்பட பல சட்ட ஒழுங்கு மீறல் முறைகளை தமி ழக முதல்வர் செல்வி ஜெய லலிதா செய்துவருகின்றார்.

இவை அனைத்துக்கும் ஒரு முடிவு கட்டவே நான் இம் முறை புதுடில்லி செல்கின் றேன் என்று ஆளுநர் சென்னா ரெட்டி சென்னை விமான நிலையத்தில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் கூறினர், (வி-இ)

### 6 பற்றறிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் இரண்டு பற்றறி வாங்கி வாருங்கள் எனக்கூறி அங்குள்ள கடைகளுக்கு திருப்பி அனுப்பி அவர்கள் மேலதிகமாக இரண்டு பற்ற றிகளை வாங்கிவந்த பின்னர் மொத்தம் 6 பற்றறிகளுடன் செல்ல அனுமதித்தார்கள் என்று கூறப்படுகிறது 71-இ

### புலிகளுடன் பேசி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைக்கு சமாதானத்தீர்வு காண்பதில் அரசாங்கம் உறு தியாக இருப்பதாக அமைச் சர்கதிர்காமர் இதன் போது இந்தியத் தலைவர்களிடம் உறு தியாகத் தெரிவித்தார். வி-இ

### பொருளாதார

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

றுக் கொண்டிருக்கும் வேளை யில் ஜெனீவா உடன்படிக்கை கடைப் பிடிக்கப்படவேண்டு மெனவும் இதன்படி வடபகுதி தமிழ் மக்களுக்குத்தேவை யான உணவு மற்றும் மரு ந்து வகைகளை அனுப்பி வைப் பதில் உள்ள தடைகள் அனைத் தும் நீக்கப்படவேண்டுமென வும் அந்த அமைப்பு மேலும் கேட்டுள்ளது. இ

### மாகோவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகத்தில் தரித்து நின்ற குமண கப்பல் பொருட்களை இறக்கிமுடித்துவிட்டு, மா ஏற் றுவதற்காக நேற்று முன் தினம் திருகோணமலைக்குப் புறப்பட்டது.

இக்கப்பல் மீண்டும் அடுத்த சில தினங்களில் இங்குவந்து சேருமெனத் தெரியவருகின் றது.

மாகோ கப்பலில் கொண்டு வரப்பட்ட மண்ணெண்ணெய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மூலம் பங்கீட்டு அட்டைக்கு விநியோகம் செய்யப்படவுள் ளது. 160

### பாப்பரசர்

1ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது.

பாப்பரசரின் இலங்கைக் கான விஜயம் எக்காரணத்தி னால் இரத்துச் செய்யப்பட் டாலும் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் 30 லட்சம் ரூபா வரையிலான இழப்பீட்டை கொழும்பு அதி மேற்றிராணி யாருக்கு வழங்கும் எனவும் கூட்டுத்தாபனம் தெரிவித் துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 20-ம் திகதி பாப்பரசர் இலங் கைக்கு விஜயம் செய்யவுள் ளது தெரிந்ததே. (க-இ)

### பேச்சுக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளுக்கு தமிழ்பொதுமக்கள்தரை மார் க்கமாக பிரயாணம் செய்வ தற்கு விடுதலைப் புலிகள் வீதிப் போக்குவரத்தை திறப் பதற்கு ஆவன செய்யவேண் டும் என நாம் போராளிகளை கேட்டுள்ளோம். ஆனையிறவு பாதையை திறப்பது பற்றிய அரசாங்கத்தின் விருப்பம் புலிகளுக்கு அறிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி விடுதலைப் புலிகளுக்கு அரசு முறைப்படி கடித மூலமும் அறித்துள்ளது என்றார். (க-இ-வி)

### இந்திய அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போதே இனப்பிரச்னைத் தீர் வுக்கு இலங்கை அரசு மேற் கொண்டுவரும் சமாதான முயற்சிகளை இந்திய அரசு பாராட்டி ஒத்துழைப்பு வழங் குவதாகவும் உறுதியளித்தது என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன-

இலங்கையில் நீண்டகால மாக நிலவிவரும் இனப் பிரச்னை குறித்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அமை ச்சர் கதிர்காமரிடம் கவலை வெளியிட்டதுடன் இந்தப் பிரச்னை கூடிய விரைவில் சமாதான முறையில் தீர்க்கப் படவேண்டுமென தமது வாழ் த்துக்களை தெரிவித்துக்கொண டார்.

(இது தொடர்பாக முன் வந்த செய்தி 3-ம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது) (வி-இ)

## வெளிநாட்டு முதலீடுகள் பாதிப்பு

(கொழும்பு)

எதிர்கட்சிகளால் தூண்டி விடப்பட்டு செயற்பட்டு வரும் தொழிற்சங்கங்களின் நடவடிக்கையால் வெளிநாடு கள் முதலீடு செய்த பல அபி விருத்தித் திட்டங்கள் பாதிப் படைந்துள்ளதாக நீதி மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றுகை யிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:- அரசின் நற்பெயரைக் கெடுக் கும் விதத்தில் அரசியல் நோக்கத்துடனேயே இப்பிரச் னைகள் தூண்டிவிடப்பட்டுள் ளன.

தொழிலாளர்களை அரசாங் கத்துக்கு எதிராக தூண்டு வதன் மூலமும் அந்நிய முத லீட்டாளர்களை மிரட்டுவதன் மூலமும் நாட்டின் பொருளா தாரத்தை சீர்குலைக்கும் முயற் சியில் எதிர்க்கட்சியினர் திட்ட மிட்டு செயற்பட்டு வருவதா கவும் அவர் தெரிவித்தார்.

### கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

வடமராட்சி கிராமிய உற் பத்திக் குழுக்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 19ம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 3-00மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலத்தில் நடைபெறும்.

எனவே வடமராட்சிக்கோட் டத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமிய உற்பத்திக்குழு உறுப் பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனம் கேட்டுக்கொள்கின்றது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-